2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதாவை அவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

3. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதாவை இம் மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(உ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள் (எடுத்து விடுதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள் (எடுத்துவிடுதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதாவை இம் மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(எ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, கூட்டுறவு நில அடமான வங்கிகள் (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, கூட்டுறவு நில அடமான வங்கிகள் (திருத்த) மசோதாவை மன்றத்திற்கு அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS

1968 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

4. 1968-69-ம் ஆண்டிற்கான முதலாவது துணை நிதிநிலை அறிக்கை அளித்தல்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1968-69-ம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின்முன் வைக்க வேண்டி உங்கள் முன் வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்குகின்ற விரிவான விவர அறிக்கை யொன்று மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கையின் மொத்தம் 6 கோடியே 40 இலட்சம் ரூபாயாகும். இதில் 3 கோடியே 32 இலட்சம் ரூபாய் வருவாய்க் கணக்கின்பாற்படும். கடந்த பிப்ரவரித் திங்களில் சட்ட மன்றத்தின் முன் நடப்பு ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டம் வைக்கப்பட்ட பின்னர் ஒப்பளிப்பு வழங்கியுள்ள " புதுப் பணித் " திட்டங்களும் இத் துணை மதிப்பீடுகளில் அடங்கும். சில மானியங்களின்கீழ் முதற்கண் வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்த செலவினங்களுக்கு மேல் இப்போது அதிக மாய்ச் செலவாகக் கூடுமென எதிர்பார்க்கப்படுவதால், அந்த மானி யங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் கேட்டிடவும் இந்த வாய்ப் பினைப் பயன்படுத்திக் கொண்டுள்ளோம். மு.ப 10-00

நடப்பு ஆண்டில் ஜூன் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி வீதங்களை உயர்த்தி ஒப்பளிப்பு வழங்கியிருப்பதுவே, தற்போதைய துணை மதிப்பீடுகளில் எதிரொளிக்கின்ற மிகப் பெரிய கூடுதல் செலவினப் பொறுப்பாகும். இந்த உயர்வு காரணமாக, நமது பணியாளர்களுக்குரிய அகவிலைப்படி வீதங்கள் அதே தரங்களில் உள்ள மத்திய அரசுப் பணியாளர்களின் அகவிலைப்படி வீதங்களை ஒத்திருக்கின்றன. வழக்கம் போல் இந்த அகவிலைப்படி வீத உயர்வு உள்ளூராட்சிப் பணியாளர்க்கும், மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கட்கும் பொருந்தும். இதன் காரணமாக ஏற்படும் கூடுதல் செலவினம் ஆண்டொன்றுக்கு 3 கோடியே 60 இலட்சம் ரூபாயென மதிப்பிடப்படுகின்றது. நடப்பு ஆண்டில் ஆகும் கூடுதல் நிகரச் செலவு 2 கோடியே 70 இலட்சம் ரூபாயாகும். இதற்கென வெவ்வேறு மானியங்களின் கீழ் எதிர்பார்க்கப்படும் அளவிற்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளது. ஐந்தாம் நிதி ஆணைக் குழு நமது மாநிலத்தின் நிதித் தேவைகளைப் பற்றி முடிவு செய்கையில், இன்றி யமையாத இச்செலவுப் பொறுப்பினைக் கருத்தில் கொண்டு செப்டம்பர் திங்களில் வெளியிடுமென எதிர்பார்க்கப்படுகின்ற அதன் இடைக்கால அறிக்கையில் நமது மாநிலத்திற்குப் போதிய நிதி வசதி கிட்டுவதற்கு வகை செய்யுமென நாம் எதிர்பார்க் கின்றோம்.